8

178/F

# இசைத்தென்றல்

OFFICE OF THE REGISTRAR OF ...
19 OCT 1951
MADRAS

# MVT SANGAM

விலை அணா மூன்று

வெளியீட்டோர்
...லிம் வாலிபர் தொழு...
அதிராம...

# இசைத் தென்றல்

(பாடல்கள் நிறைந்தது)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 OCT 951
MADRAS

இயற்றியவர்கள்.

மௌல்வி. A. M. M. கமாலுத்தீன் ஆலிம்
மௌல்வி. A. M. M- ரபியுத்தீன் ஆலிம்
ஜனாப். A. M. M. இபுருகிம்.

★

வெளியீட்டாளர்

முஸ்லீம் வாலிபர் தொழுகைச் சங்கத்தார்

அபிராமம்

# முன்னுரை

இசையினைக் கண்டு தலைமறவாதரு முனரோர் எங்கு பார்த்தாலும் இன்றைய உலகில் இசை மயமே. இறைவனை எண்ணிப் பாடும்போது, இசை மனப்புண் ஆற சாந்தி தேடுவதும், இசை மழலை மொழிக் குழவியரை அமைதியாக்கு முறைமையும் இசை, இவ்வாறு எங்கும் இசை மயமே. எங்களின் நோக்கம்; நல்ல கருத்துக்களை நாடியே தோடு அஃதை இசையளவில் அமைப்பதே புனிதமெனக் கருதினோம். ஆற்றல் மிக்க அறிஞர் பலர் பாடிய கவிதைகளைத் திரட்டி இச்சிறு நூலாக வெளியிடுகின்றோம். பல வர்ண மெட்டுகளைக் கொண்ட இந்நூலில் எம்பெருமான் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றியும், இஸ்லாமியா கோட்பாடுகளைம் பற்றியும் பாடலாக்கப் பட்டுள்ளது. இப்பாடல்களை ஆக்கித்தந்த அறிஞர்களான, ரபியுத்தீன் (ஆலிம்) கமாலுத்தீன்(ஆலிம்) A. M. M. இபுராகிம் ஆகியோர்க்கு மிக்க நன்றி. குற்றம் கலைந்து குணத்தைக் கண்டு நம் மக்கள் இந்நாலுக்கு ஆதரவு தருவார்களென்றே நம்புகின்றோம்.

இங்ஙனம்,

முஸ்லீம் வாலிபர் தொழுகைச் சங்கத்தார்.

220139

# 1

(பெண்களினால் உயர் வாகிடுமே எ, மெட்டு)

அன்புபணி, செய்யும் சங்கமிதே
அதி ஜெயமுடன முன்னேறி
நன் முஸ்லிம் வாலிபர் தொழுகைச் சங்கம்
நமது குறை தீர்க்கும் (அன்புபணி)

வினையித்திரியும் புண் மாந்தரினே
விவேக மூட்டித் தொழவே செய்து
தீனுல் இஸ்லாத்தை நாட்ட
திறனை பணி செய்யும் (அன்புபணி)

விடியுமுன்னமே எழுந்து
இடமுடனே இளைஞர் கூடி
மடமை நீக்கும் இசைப்பாடி
மாந்தரை விழிக்கவே செய்யும் (அன்புபணி)

ஆதி இறையோனை நாடி
அன்பு பெற போதமூட்டும்
ஓதும் இபுருஹீம் கவியே
உயர் தொழுகைச் சங்கம் இசைதாமே
(அன்புபணி)

---

ரபியுத்தீன் பாடல்கள்
யாநபியாம் ரசூலுல்லா
கண்பார்த்தருள் ஹபீபல்லா
(யா நபியாம்)

2

அ. பல்லவி.

ஆதியின் ஒளிவாய் வந்தோரே
ஆதி முகம்மது முஸ்தபா,
வேதனை தீர்க்கக் கியாமத்தில்
வேண்டும் முகம்மது முஸ்தபா
(எங்கள் யா நபியாம்)

ஆதியை அஞ்சி வணங்கினோம்
ஆதரிக் தாள்கு வீர் முஸ்தபா
ஜோதி சுவர்க்கத்தில் எங்களை
சேர்த்திட வேண்டும் முஸ்தபா
(எங்கள் யா நபியாம்.)

உச்சியின் கண்க ளாகியே
உருகி வடியும் அந்த நேரத்திலே
பச்ச மதாய் மன்றாடிடும்
பாரில் முகம்மது முஸ்தாபா
(எங்கள் யா நபியாம்)

அபிராம முஸ்லிம்கள் தொழுகையை
நீடிய தாய் நிலையாக்கியே
தேடிய வரமருள் தந்திட
நாடி மன்றாடிடும் முஸ்தாபா.
(எங்கள் யா நபியாம்)

பாலன் ரபியுத்தின் பாடினர்
பாக்கியம் எல்லோருக்கும் தேடினர்
யோக்கிய ராக்கவே நாடினர்
இலாக்கிய வரமருள் முஸ்தபா
(எங்கள் யா நபியாம்)

# 3

(ஆசை கொள்ளும் மீசையுள்ள)

(என்ற மெட்டு.)

ஆதிரசூல் நபியை அகங்கொண்டு பார்த்தீரா
செவி கொண்டு கேட்டீரா
அடையாளம் ஏதுங்க அதைக்கொஞ்சம்,
சொல்லுங்க சொல் அவர்தானுங்க
அகமது நபி தானுங்க
உண்மை நபி தானுங்க—ஆதி

(அனுபல்லவி)

சிங்கத்தை வெல்லும் வீர பொங்கும்நபி தானுங்க
அவர்க்கெல்லாம் அவசியம் தானுங்க
சன் மார்க்க நபி தானுங்க
குறசிய குவ்பார்க்களை கூவி அழைப்பாருங்க
அடையாளம் ஏதுங்க அதைக்
கொஞ்சம் சொல்லுங்க...சொல்
அவர் தானுங்க அகமது நபி தானுங்க
உண்மை நபி தானுங்க

(ஆதிரசூல் நபியை)

ஐந்தாவது ஆண்டில் ஆதியிடம் சென்றாருங்க
அங்கு ஆதமைக் கண்டாருங்க நபி
மூஸாவைக் கண்டாருங்க
ஏழு நரகம் சென்று மாலிக்கை கண்டாருங்க
அடையாளம் ஏதுங்க, அதைக்
கொஞ்சம் சொல்லுங்க—சொல்
அவர்தானுங்க அகமது நபி தானுங்க
உண்மை நபி தானுங்க (ஆதி ரசூல் நபியை)

# 4

(ஆயிதிவாளி என்ற மெட்டு)

நாம் புகழ்வோமே நாம் துதிப்போமே
நவின மலர் நபி உம்மத்தாமே
அவர்கள் சுன்னத்துவையும் புகழ்வோமே-(நாம்

ஆதி இறை வேதத்தை ஆவலுடன் ஓதுவோம்
நீதியான திருமறையை என்றும் கொண்
டாடுவோம்
ஜோதியான குரு நபி நாதா
சன்மார்க்கத்தை நிலைத்த மஹ்மூதா (நாம்)

காலை மாலை அனுதினம் கமலமனத்திருத்திடும்
வேலை வேலை எங்கள் நாவை வெகுசிறப்பா
யாக்கிடும்
ஆதிபதியான ரஹிமானே நீ ஆதரித்தருள்வாய்
பூமானே (நாம்)

அகமகிழும் ஆரிபீன் ஓ, எம், ஹாஜி மௌலவி
அவர்கள் பொருட்டால் எங்களை சுவர்க்கப்
பதியில் சேர்த்துவை
என்றும் அருள்புரி ரஹிமானே ரபி உத்தின்
பாடிப்புகழ்ந்தாரே (நாம் புகழ்வோமே.)

---

# 5

(ஷசிபட்டாசே எ. மெட்டு)

ஆதி நகுலே அஹமது நபியே
அகிலத்தில் உதித்த நபி நபி
குரைஷியர் கோவே யாமுஸ்தாபாவே
என் துயவென்னும் இல்லையே

மறை புர்க்கானில் இறைவன் சொல்லி
இஸ்லாம் கூட்டம் இல்லையே.

(ஆதி)

வெள்ளி நாளில் பள்ளிவராதவர்
இஸ்லாம் மார்க்கத்தில் இல்லையாம்
தொழுகை இழந்த மானிடரெல்லாம்
முனாபிக் கென்று உரைத்தாரசம்

(ஆதி)

தொழுகா தோஷி பாவியை நீ போய்
தோழமை பிடியாதே மானிடரே
அழுவான் தீயில் விழுவான் தேளும்
அரவம் பிடித்திடும் மானிடரே

---

## 6

(அன்னமிட்ட வீட்டிலே என். மெட்டு.)

அகிலம் புகழும் நாயனே
அடிமையின் சகாயனே
அன்பைத் தாரும் தூயனே
ஆர்வமுள்ள மெய்யனே (அகில)

கர்பலா போராட்டமே
ஹுசைனாரின் பெருந் தீரமே
தாகத்தால் முகவாட்டமே
கண்ணீர் விட நேருமே (அகில)

ஹசனாரின்ற செல்வமே
காசிம் மணா மகனுமே

கல்யாணத்தின் வேகமே
மரணத்தின் கை சேதமே (அகில)

பாலை வனத்தில் பாவிகள்
பறிதவிக்கும் வேலையில்
பைஹம்பரின் அஹ்லிகள்
பறி தவிக்க நேருமே (அகில)

கேளுங்கள் தீனோர்களே
சன்மார்க்க வீரர்களே
கர்பலா மைதானிலே
காசிம் மடிந்தார்களே (அகில)

மார்க்க முஸ்லீம்களே
மூர்க்கத்தை ஒழிப்பீர்களே
ஊக்கத்தை அழிப்பீர்களே
உண்மையை அறிவீர்களே

---

## 7

ஆதி அன்னல் முஹம்மதை தானே
வந்து அவதரித்த கோமானே (ஆதி)

உம்மைக் கூவி கூவி தினமே—
பாதம் பாடித் திரிந்தேன் நிதமே
உங்கள் பாதார விந்தத்தை நானே
என்று காண்பேனே அறியேனே (ஆதி)

சக்ராத்திலும் கலிமாவே
சங்கையாக அருளும் பூவே
மிக்க வேதனையடைந்தேன் ராஜா........
எங்களை ஆதரித்தருள் தாஜா (ஆதி)

# 8

ஆலிம் கமாலுத்தீன் அவர்கள் இயற்றிய

## பாடல்கள்

(ஹம் தர்துக்கு அப்ஸானு என்ற மெட்டு)

எம்மண நிலை மாறுதோ தாகல்மகிழ்வைத்தாராதோ
ஜெம்மல் நபி திருவருளால்
ஜென்னத்திலில் சேர்க்காதோ (எம்மணநிலை)

நிம்மதியூட்டும் தாயே
நின் சேர்வடி சேர்ப்பாயே
இம்மையில் துயர் தீர்ப்பாயே
இமை மூடுமுன் வருவாயே (எம்மணநிலை)

பல அல்லலால் மாய்ந்தேனே
ஆதரவில்லா நானே
அணைக்காவிடில் அழிவேனே
என்னை ஆதரிப்பூமானே (எம்மண நிலை)

பெண்டு பிள்ளைகளினாலே
வினை வந்துமுல் வதினாலே
மண வாழ்க்கையின் வெருப்பாலே
மனங்கலங்கிடு முன்னாலே (எம்மணநிலை)

ஆலிம் கமால் நானே
பல அல்லலால் நொந்தேனே
உமைக் கூவி அழைத்தேனே
குறை நீக்கிடும் மன்னனே (எம்மண நிலை)

---

# 9

(எண்ணி எண்ணி பார்க்க மனம்) (எ. மெட்டு)

மன்னி, மன்னி, என்றழுது மன்றனை வேண்
டிடுறேன்

மன்னித்தருளாவிடிலோ மாநிலத்தில் என்
செய்வோம்

மன்னனே என் வினையை 'எந்நாளும் நீக்கி வை
புண்ணாய் மனங்குளிர்ந்து பன்னாளே வாடி
னோம் (மன்னி' மன்னி,)

அஞ்சி, அஞ்சி, ஆழ்பரிக்கும் அடிமையைக்
கொண்டாள்பவா
தஞ்சம் தேடி வந்தவர்க்கு நெஞ்சிலன்பு பூண்
டவா(மன்னி, மன்னி,)

அங்கு மிங்கும் எங்கும் பார்த்து இறையைக்
காணவில்லையே
இவ்வுலகம் தனில் வாழும் மானிடர்க்குத்
தொல்லையே (மன்னி, மன்னி,)

கெஞ்சும் கமால் அஞ்சுதலை ஆத்தி வைக்கும்
மன்னவா
நெஞ்சுடனே நான் தொழுதேன் நேரில்
வருமையா (மன்னி, மன்னி,/

என் ஆசை ரஹ்மான் ஏகாந்தமாகவே
தன்னாலே இருப்பதை அறிவேன் நானே
கண்ணிரண்டும் காண்பதில் அறிதென்று எண்
ணியே
காரண நபியுரைத்த கருணையுள்ள வண்
மையே (மன்னி, மன்னி,)

---

## 10

(ஆமிதிவர்ளி எ, மெட்டு)

ஆண்டவன் முனிவேதும் ஆலத்தின் முடிவே
நீண்ட பண்ம் கோரும் குணாளா
நீ வாங்குமவட்டிபழிசெய்யும்தோழா(ஆண்டவன்)

27:47



நீண்ட கால வட்டியால் நீந்துவாயே நரகினில்
கூண்டில் பட்ட நாய்போல குத்துவாராம்
மலக்குகள்

சல்லி வட்டியும் ஹராமாமே
நான் சொல்லி விட்டேன் நற்கதி போமே
(ஆண்டவன்)

ஆயிரம் ஹஜ்ஜாயினும் அழிந்திடுமே வட்டியால்
தாயுடனே செய்த ஜினா போல பலன்
ஆகையால்

பள்ளி கட்டுதலும் ஹராமாமே
நான் சொல்லி விட்டேன் நற்கதிபோமே
(ஆண்டவன்)

கோடி, கோடி, தர்மமும், ஓடி, ஓடிப்போகுமே
நாடி செய்தநன்மைகள் நரகம்பாம்பு ஆகுமே
தள்ளி விடுவார் நரகத்துல்லாலே
நான் சொல்லி விட்டேன்-கடமை
(என் மேலே—ஆண்டவன்)

ரத்தக் கடலில் நீந்தியே கத்தி, கத்தி திரிகுவாய்
சுத்தியிருக்கும் மலக்குகள் கல்லால் சூரை
யாடுவார்

அல்லி, அல்லி, சீள் குடிப்பாயே
நான் சொல்லி விட்டேன் நீ தெரிவாயே
(ஆண்டவன்)

போன காலம் போகட்டும், புண்ணியம் உண்டா
கட்டும்
[illegible]யே நடந்து தீவினைகள் ஓடட்டும்
சல்லி [illegible]டித்தாரே
இந்தச் சல்லி வட்டியைத் தடுத்தாரே
(ஆண்டவன்)

220130

## 11

(மனுசனே, மனுசன், எச்சுப் பொழைச்சது அந்தக்காலம்)
(எ. மெட்டு)

ஆண்டவனே அஞ்சி நடப்பது அந்தகாலம் அது
அந்தக்காலம்
அநிக்கிரமனுக்கு அடங்கி நடப்பது இந்தக்
காலம்—இது இந்தக்காலம்
பெருமானரை பின் பற்றுவது அந்தக் காலம்
(அது—அந்தக்)
பணக்காரரை பின் பற்றுவது இந்தக்காலம்
(இது இந்தக்காலம்)
மக்களேனே வரும் ஒன்று பட்டது அந்தக்காலம்
அது—அந்தக்காலம்
மடமைத்தனத்தால் பிரிந்து கிடப்பது இந்தக்
காலம்
இது—இந்தக்காலம்
நீதி வழுவா நடந்து வந்தது அந்தக்காலம் (அது அந்த)
என்றும் வஞ்சகமாய் காட்சியளிப்பது இந்
தக்காலம் இது—இந்தக்காலம்
இஸ்லாத்திற்கு உயிரைக் கொடுத்தது அந்தக
காலம் அது—அந்தக்காலம்
இறைவனே என்றும் அஞ்சாமலிருப்பது
இந்தக்காலம் இது இந்தக் காலம் (ஆண்டவனே)

---

## 12

(மில் கேபி சபேகயன் எ. மெட்டு)

கருணை நிதியான குருவாமே
கவிராஜன் போற்றும் விமலனருளாமே
(கருணை நிதியான)

மனக்கும் மதினா நகர் வாழும் ரசூலே
    மன்னர் மஹ்மூதே இந்நாளே
மனிதர்க் கருள் புரிவதினாலே
    மகிதளம் போற்றும் முஹம்மது ரசூலே
(கருணாநிதியான)

தாஹாய் ரசூலாய் தரணியில்வந்தோராம்
    தாகம் தீர்க்கும் பெரியோராம்
தனியோனின் கலிமா புகழ்ந்த நபியாகும்
(கருணாநிதியான)

காருண்ய நீதியை கடை பிடித்தோராம்
    காரண நபியாய் வந்தோராம்
கானில் மான் பிணைத்த விர்த்தோராம்
    காரண மணியாய் புவியிலுதித்தோராம்
(கருணாநிதியான)

---

## 13 ரமலான் பைத்து

(ஹம் தர்துகே அப்ஸானு எ. மெட்டு)

மறை இறங்கிய திருரம்ஜான்
    மகத்துவ முறைத்தான் மன்னன்
குறை நீக்கிடும் நல் ரம்ஜான்
    குருநபிசொல்லும் பர்மான் (மறை)

அறம் செய்திட நல் மாதம்—அஹமது நபி குரு
போதம்
    பலவினை தீர்நல்விரதம் - எழுவீரேஸகர்நேரம்
(மறை)

அக பாவங்கள் போக்கிடுமே—அலங்கோலம்
நீங்கிடுமே
    ஜெக மீது இலாக்கியமே—எழுவீரே ஸகர்
நேரம்

நல் அமல்களைச் செய் வீரே—நய நோன்பை
வைப்பீரே
பயம் அறவே வாழ்வீரே—எழுவீரே ஸகா
நேரம் (மறை)

எழு நரகம் அடைத்திடுமே—பொன் சுவர்க்கம்
புகுத்திடுமே
நமக்கின்பம் வகுத்திடுமே—எழுவீரேஸ்கர்
நேரம் (மறை)

அழகுயர் குலமானிடரே—அல்லா ஹ்வைப்
பணிவீரே
அருசிந்தாஜ்ஜனிவீரே—எழுவீரே ஸகர்
நேரம் (மறை)

நோன்பாளியின் நற்சேவை நூராயிரமாய்ப்
பெருகும்
சோம்பியலையாமல் எழுவீரேஸகர்
நேரம்—(மறை)

அகிலம் புகழ் அபிராமம்—ஆண் பெண்கள்
தினம்சேமம்—அருள்பெருவோம் இனிநாமும்—
எழுவீரேஸகர் நேரம்—(மறை)

ஆலிம் கமால்பாடி—அழைத்தேன் நன்மையை
நாடி—நலமுருவோம் நாம்கூடி—எழுவீரே
ஸகர் நேரம்—(மறை)

முக்திபெறச் செய்வதிலே முஸ்லிம் வாலிபர்
தொழுகைச் சங்கம்
சித்தரிந்தலைக்கின்றோம்-எழுவீரேஸகர்
நேரம்-(மறை)

———

## 14

கீழ்க்காணும் ஆறு பாடல்களும்,

**A. M. M. இபுருகீம் அவர்கள் இயற்றியவை.**

(எண்ணி, எண்ணி, பார்க்க மனம், எ. இசை.)

துட்டுக்குத், துட்டு வட்டி வாங்கும் முஸ்லிம்
தோழனே
தொல்லையிது, பொல்லாத பாபமாகும் கள்
ளனே (துட்டுக்கு)

அ. ப

மட்டியே நீயே காசாசையாலே
வட்டியால் பணத்தை மூட்டை கட்டாதே—
நீ மூட்டை கட்டாதே (துட்டுக்கு)

சரணம்

நேர்மையாகப் பாடுபட்டுசெல்வத்தை தேடுவாய்
நீ இயது மதுவே, வேதமுறையதுவே
சீரழிந்து நரகில் விழுயெண்ணங் கொள்ளாதே
செந்தமிழ் இசை இபுருகீம் உரை தள்ளாதே
(துட்டுக்குத் துட்டு)

---

## 15

**மழை பைத்து.**

(ஹம் தர்துகே அப்ஸாஜு என்ற மெட்டு.

மாமலர் மழை தூவிடவே—முன்னோனிடம் மன்ருடி
சேமம் பெற நாடுவோமே—ஜெகமெங்கும் செழித்
திடவே (மா)

அ. ப.

ஆதியிறைவனே நீ—அடியார் செய்பிழை பொறுத்தே
ஜோதிச் சுடர்போலே—தூய மழைத் தருவாய் (மா)
கருணை வளர்த்திடவே—காட்டுவோம் நெறிப்படியே

குறை தீரவே வல்லோனே—பருவ மழை தந்திடு
வாய் (மா)
ஏங்கித் தவித்தோமே—எழில் மாமழையின்றியே
நீங்காத் துயர்தீர—நன் வான்மழை ஊற்றிடுவாய்
(மா)
காயும் கதிர் பயிர்கள்—பேயும் டுபான் மழையாலே
நேயமுறச் செழுமை—ஆக வளர்ந்திடுமே (மா)
வான் மழையில்லாவிடில்—இந்த வையத்தில் வளமுண்
டோ?
தேன்கவி இபுரூஹீம்-இசைக்கிரங்கி மழை தருவாய்
(மா)

---

## 16

## நோன்பு பைத்து

(காதல் பலியாகி நீயும் எ. இசை)

மாண்பு தவழும் ரமலான் மாதமிதாகுமே
வல்லோனின் அன்பினை நாடும் உயர்மாதமே
தீன் வழியோரே நீரே! துயில் எழுவீரே நன்றே
சோர்ந்துறங்காமலே நோன்பு நோற்க எழு
வீரே (மாண்பு)
ஜோதி மிளிர் புருக்கான் இறங்கியமாதமிதுவே
சோபித உபவாசத்தால் சிறந்திடுவோமே
நாமே
வீதி சுற்றியே வந்தோம் தொண்டரே
விரைவிலெழுந்துமே வாரீர் அன்பு மாந்தரே
(மாண்பு)
வணக்கம் புரிந்து இறைவன் நீதியை நாட்டவே
வழக்கத்தில் கொணர்வோம் சகை சிறந்
துயர் வாகியே
கணக்கமில்லாதே எழுந்திடுவீரே

சீர்முஸ்லீம் வாலிபர் தொழுகைச் சங்கம்
இசையிதே! (மாண்பு)

---

## 17

(ஆசைக்கிளியை எ. மெட்டு)

பாசமிகுந்த நபியே முஹம்மத் அண்ணலே!
அண்ணலே
பெருமைக்குரிய மதினா வாழும் வள்ளலே!
வள்ளலே (பாசமிகுந்த)

அ. ப.

ஏகன் தன்னை ஏழுவானம்ஏறி நேர்ப்பார்த்தோரே
ஏழையர் துயரை தம் துயரெனவே எண்
ணியே தவித்தோரே (பாச)

குறைகள் என் செய்தோம் அறைகூவுதல்
செவியே புகவில்லையா?
கலிஞானமோங்கி இருள் அகலவே வந்தோம்
மனமில்லையா?

துளி அருள் தந்தால் போதுமே எங்கள் தாஹா
முஹம்மத் வள்ளலே!
சாற்றிடும் முஸ்லீம் வாலிபர் தொகைச் சங்க
மிசை இபுறுஹிமே! (பாச)

---

## 18

(மானும்—மயிலும் என்ற மெட்டு)

ஆ.....மாதவ குருவே மாமுஹம்மதுவே
மலரடி பணிந்தோம் மன்னர் பிரானே
ஆட்கொள்ளுவீரே—எம்மையே—ஆட்கொள்ளு
வீரே

அனுபல்லவி.

கோதிலா நபியே குற்றம் பொறுத்தே
பூதல மாயைப் பற்றை அறுத்தே
ஜோதி இறைவன் தூய நெறியே
சார்ந்து மனமே மகிழ பூமானே
ஆட்கொள்ளுவீரே—எம்மையே—ஆட்கொள்ளு
வீரே

பருவமதியை அருகழைத்தோரே
கருணை வடிவாய காசினிமீதே
கானகமானின் பிணையானோரே
தோனுமிசை தொழுகைச் சங்கத்தை
ஆட்கொள்ளுவீரே—எம்மையே—ஆட்கொள்ளு
வீரே

(மாத)

# 19

(யு. மு. அ. பைத்து.)

## ரமலான் பைத்து.

அல்லாஹு, அல்லாஹு, அல்லா—ஆதி
யாரப்பில் ஆலமீன் அல்லா—உன்னை
சொல்லால் புகழ்வோமே அல்லா—சுப
சோபனம் தந்தருள் அல்லா. (அல்லாஹு)

ஷஹரே ரமலானில் எழுந்து—நோன்பை
சங்கையுடன் நாம் புகழ்ந்து—வெகு
சந்தோஷத் தெல்லோரும் வைத்து—நாளும்
சேர்க்கக் கிருபைசெய் அல்லா. (அல்லாஹு)

காத்தருள்வாய் ரஹுமானே—உன்னைக்
கருதியோர்க் குதவும் சீமானே—என்றென
கல்புகந்த பூமானே—நித்தம்
கதி தந்தருள்வாயே அல்லா. (அல்லாஹு)

பர்லான நோன்பை விடாது—நாம்
பதியினிலே மாரிடாது—மகான்
பகர்ந்த சொல்லைத் தவறிடாது—பலன்
பெருகச் செய்திடுவாயே அல்லா. (அல்லாஹு)

நாளை மகுஷரின் வேலை—அப்போ
நலமில்லார் குருகுமே மூளை—தேடி
நாடியலை வாரகூலை—கொண்டு
நன்மைக்குதவிசெய் அல்லா. (அல்லாஹு)

———

## ௨0

(து, மேரா சாந்மே என்ற மெட்டு)

தீன் ஓங்கி வாழ்விலே மேன்மையாகவே—ஓ
தாகா இரசூலர் போதம் நாடுவோம்—போதம்
நாடுவோம் (தீன்)

அ. ப.

தானென்ற கருவம் நீக்கியே அறிஞர் தம் வழியே
கூடுவோம்—தம்
கானலின் நீரை உலகினைத் தெளிவீர் மதி
மயங்காதீரே
கருத்தினை நெஞ்சில் பரித்துயர்வாகி
கோபக்கனல் நீக்கி (தீன்)

துட்டத்தனத்தின் எல்லையானத் தீவட்டியை
விட்டொழிப்பீரே நீர்—வட்டி
எட்டுத் திக்கிலும் ஓங்கிடும் இஸ்லாம் ஏற்றந்தனைப்
பாரீர்
எழில்பசுஞ்சோலை மாமதினா வாழ் இரசூல்
பொன்மொழி பாரீர் (தீன்)

ஒற்றுமையோங்கி கல்வியுமோங்கி உலகினிலே
புகழ் சூடுவோம்—உல
உறுதிபுருக்கான் அனுதினம் ஓதி ஒப்பில்லாத
கதி பெறுவோம்

ஓதிடும் இபுருஹிம் கவி முஸ்லிம் வாலிபர்
தொழுகைச் சங்கம்

# 21

(யகாம்பத்லா என்ற மெட்டு)

மறைந்தமகான் அபிராமம் புகழ்ஜோதி அண்ணல்
மணியே!
மாதவமே அப்துல் காதிர் ஆலிம்சாகிப் வள்ளல்
மணியே.

அ. ப.

கீழக்கரை மாப்பிள்ளை லெப்பைபால்ஓதியே
புகழெய்தி
சீர்த்தி வேலூர்தனிலும் ஓதி கலைக்கண்ட எம்தவ
மணியே.
(மறைந்த)

கனவினிலேகண்ட போர்வை கனிவாக நிஜமாகி
குருமுஹய்யத்தின் திருப்போர்வை கைக்கொணர்ந்த
வரை நேர்பார்த்தவரே
(மறைந்த)

கல்வத்து நாயகரிடமே கலந்துரையாடிய பதியே
கதியருள்வீர் அபிராம முஸ்லிம் மாந்தர் உயர்ந்
திடவே
பொல்லாவுலகில் நெறிகண்டு புனித உடல்
கொண்ட நிதியே
புகழ்பாடும் முஸ்லிம் வாலிபர் தொழுகைச் சங்கம்
இசை இதுவே.

முற்றிற்று.

அஸ்ஸாமு அலைக்கும்.

# எங்கள் நன்றி.

ஆற்றலும், ஆண்மையும் நிறைந்த தோழர்களே!

நாங்கள் இப்புத்தகத்தை வெளியிட்ட நோக்கம் யாதெனில், இஸ்லாமிய மக்கள் யாவரும், ஆண்டவன் அளித்த ஐந்து வக்குத்து தொழுகையை தொழுதுவரவேண்டும் என்பதற்காகவே இப்புத்தகம் வெளியிடுவதற்கு வேண்டிய பண உதவி செய்தவர்களுக்கும் எங்கள் நன்றி. இப்புத்தகத்தை அச்சிட்டுக்கொடுத்த, ஜனாப். S. M. முகம்மது அபூபக்கர் ஜனாப். P. A. ஷாகுல் ஹமீத்து, வீரசோளம் ஜனாப். K. M. E. இஸ்மாயில் அவர்களுக்கும் எங்கள் நன்றி! இப்புத்தகம் வெளியிடுவதற்கு, ஆதரவுதந்தாற்போல், மேலும் மார்க்க சம்பந்தமான புஸ்தகம் வெளியிடுவதற்கு வேண்டிய உதவி செய்வார்களளென்றே நினைக்கின்றோம்.

இங்ஙனம்,
முஸ்லீம் வாலிபர் தொழுகைச் சங்கம்,
அபிராமம்.

கே. ஜி. பிரஸ், சென்னை—1.

## படிக்கும் முன்

—×—

| பக்கம் | வரி | இதை | இதுவாக வாசிக்க. |
|---|---|---|---|
| 2 | 12 | பாடுகளும் | பாடுகளைப் |
| 14 | 2 | ஸகா | ஸகர் |
| 14 | 17 | தலைக்கின்றேம | தலைக்கின்றேம் |
| 15 | 8 | கொள்ளரதே | கொளளாதே |

---


A. M. M. இபுராஹீம் அவர்களால்

இயற்றப்படும்

★ "கோழை நெஞ்சு"

★ "சிங்கப்பூர் திருடன்"

இச்சிறு கதைகள் உங்கள் சிந்தனை விருந்தாக கூடிய சீக்கிரம் வெளிவரும்.

எங்களின் அடுத்த மார்க்க வெளியீட்டை எதிர்பாருங்கள்.

?

---

அருள் ஏஜன்ஸி,

எம்மிடம் ரப்பர் ஸ்டாம்பு, பிளாக்குகள், சீல்கள், இரும்பு டைகள், கலர் பிரிண்டிங் முதலிய வேலைகள் சுத்தமாக செய்து தரப்படும்.

18, பிடாரியார் கோவில் சந்து, சென்னை-1.

# இசைத் தென்றல்

(பாடல்கள் நிறைந்தது.)

→×←

இந்நூல் பலவர்ண மெட்டுக்களால் அமைக்கப் பெற்றுள்ளது. இந்நூல் கீழ்க்காணும் இடங்களில் கிடைக்கும்.

முஸ்லீம் வாலிபர் தொழுகைச் சங்கம்,
அபிராமம்.

---

காதிரியா டீ ஹோட்டல்,
அபிராமம்.

---

(வீரசோளம் ஏஜண்டு)
K. M. E. அப்துல் ஜப்பார்,
வீரசோளம்.

---

(சென்னை ஏஜண்டு)
S. M. முஹம்மது யாசீன்,
4/18, மண்ணடித் தெரு,
சென்னை-1.

---

220139

★ உயர்ந்த பட்சணங்கள்

★ காரமானவை

★ தித்திப்பானவை

★ நேர்த்தியான டீ நீர் & காபி உ
குடன் திருப்திகரமாக அளி
படும்.

## காதிரியா டீ ஹோட்டல்

அபிராமம்.

*சொந்தக்காரர்:* **K. M. N.** எ

## காஜா தர்பார் ரெஸ்டாரெண்ட்

59, 60, மூர்த் தெரு, சென்னை-1.

**உடலுறுதிபெற உன்னத உணவு அவசிய**

*அன்பர்களே!*

திருப்திகரமான வகையில் உடலுக்குட
தாகவும், சுத்தமாகவும், சுகாதார முறைப்
தயாரிக்கப்படும் எங்கள் உணவு சாலைக்கு ஒ
விஜயம்செய்து இன்புறுங்கள்.

**சாப்பாடு நேர்த்தியாய் அளிக்கப்படும்!**

*சொந்தக்காரர்:* **K. A.**

கே. ஜி. பிரஸ், சென்னை—1.